**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 254 - பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 18 ஆம் திகதி திணைக்களத்தின் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,455.00 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,426.27 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 28.73 மில்லியன் அதாவது 1.97 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,341.40 | 1,324.98 | 16.42 | 1.22 |
| மூலதனம் | 113.60 | 101.29 | 12.31 | 10.84 |
| மொத்தம் | 1,455.00 | 1,426.27 | 28.73 | 1.97 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

உரித்து பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் (தலைப்பு 153) ரூபா 50.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 49.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 0.05 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 வருமானக் கணக்குகள்**

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 1,320.00 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,256.33 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 95 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| வருமான குறியீடு | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10:03:07:02 | 1,300.00 | 1,240.39 | 59.62 | 4.58 |
| 10:03:08:00 | 20.00 | 15.95 | 4.05 | 20.25 |
| மொத்தம் | 1,320.00 | 1,256.34 | 63.67 | 4.82 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 25401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 54.00 | 54.00 | 40.00 | 52.30 | 230.00 | 180.63 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0114/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 5.96 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் வரும் 02 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.603 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0134/000 | 1.598 |
| 6000/0000/00/0018/0099/000 | 0.005 |
| | 1.603 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அரசாங்க அச்சக திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் வாகனங்கள் தவிர ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை. |
| (ஈ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்படவில்லை. |
| (உ) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்படவில்லை. |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணக்கீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4.29 மில்லியன் ஆகும்.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 13 செலவின விடயங்களுக்காக மிகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் கட்டிடம் மற்றும் நிர்மாணப் பராமரிப்பு செலவின விடயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் 90.59 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னரும் செலவின விடயத்தில் சேமிப்பு 76 சதவீதமாக இருந்தது.

(ஆ) 16 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ரூபா 23.35 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது. இதில் இரண்டு செலவின விடயங்களை உள்ளடக்கிய 03 செலவின விடயங்களில் சேமிப்பு காணப்படும் போது மாற்றப்பட்டமையின் காரணமாக மாற்றப்பட்ட மொத்தத் தொகையும், மேலும் 13 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட நிதிஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்களும் அவதானிக்கப்பட்டன.

(இ) 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பதிவாளர் சேவையின் பதவி வெற்றிடத்தை நிரப்பும் போட்டிப் பரீட்சைக்காக செலுத்த வேண்டிய தொகைக்கு, பொறுப்புக்களை ஏற்படுத்தாமலும் அல்லது மீளாய்வாண்டின் போது நிதிஏற்பாட்டை ஒதுக்காமலும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு ரூபா 5,802,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றப்படாமல் ரூபா 2,894,110 தொகையான இயந்திரமும், இயந்திர உபகரணங்களும் மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் செலவின விடயத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 வருமானக் கணக்கு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டு இலக்கம் 02 இல் வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 10:03:07:02 ஆம் வருமானக் குறியீடு - பதிவுசெய்தல் கட்டண வருமானக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான வருமானத்தை எதிர்வுகூறும் போது நாட்டிலுள்ள சகல காணிப்பதிவாளர் அலுவலகங்களினதும் பிரதேச செலயகங்களினதும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் திணைக்களத்தால் எதிர்வுகூறப்பட்ட ரூபா 1,100 மில்லியன் தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு திறைசேரியால் ரூபா 1,640 மில்லியனாக வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் அது ரூபா 1,300 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமான சேகரித்தல் ரூபா 1,240 மில்லியனாக இருந்தது.

(ii) முன்னைய வருடத்தின் நிலுவை வருமானம் ரூபா 7,975,807 இலிருந்து அறவிடல்கள் ரூபா 1,797,672 அதாவது 22.5 சதவீதமாக மாத்திரம் இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவை வருமானம் ரூபா 11,566,923 ஆக இருந்தது. அவ்வாறே 06 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் காணப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி மேலதிக அறவிடல்கள் முறையே ரூபா 869,849 மற்றும் ரூபா 303,310 தொகை அறவிட வேண்டிய மீதியில் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வருமானக் கணக்கில் அறவிடவேண்டிய மீதி அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்தும் பிரதேச செயலகங்களிலிருந்தும் குறித்த பிரகாரம் மாதாந்த வகைப்படுத்தல் அறிக்கை பெறப்பட்டு உள்ளபடியான வருமானத்தையும் நிலுவை வருமாத்தையும் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) 10:03:08:00 ஆம் வருமானக் குறியீடு - சட்டத்தரணிகளுக்கு வருடாந்த உயர் நீதிமன்ற சான்றிதழ் விநியோகிக்கும் கட்டண வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமான மதிப்பிடு எதிர்வுகூறப்பட்டு வருமான இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 14.4 மில்லியன் தொகையான தேறிய வருமானம் மற்றும் 12,925

அளவிலான பதிவு செய்திருந்த சட்டத்தரணிகளின் எண்ணிக்கை என்பன தொடர்பாகக் கவனத்தில் கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் எதிர்வுகூறப்பட்ட ரூபா 12.5 மில்லியன் தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு திறைசேரியினால் ரூபா 25.0 மில்லியனாக வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் அது ரூபா 20.0 மில்லியனாக மாற்றப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் ரூபா 15,951,778 ஆகக் காணப்பட்டது.

(ii) சட்டத்தரணிகளை புதிதாகப் பதிவு செய்தல், பதவினைப் புதுப்பித்தல், ஏனைய மொழிகளில் செயற்பாடல், நீதிமன்ற வலயங்களை மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 2,000 மற்றும் ரூபா 1,000 வீதமாக இருந்த போதிலும், உள்ளபடியாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 15,951,778 ஆக இறுதி இலக்கம் மூன்று "778" ஆனமையால் உள்ளபடியான வருமானத்தை சரியாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது மரணமடைந்த மற்றும் விலகிய சட்டத்தரணிகள் தொடர்பாக கண்டறிந்து சட்டத்தரணிகளின் பெயர்ப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

25401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 219 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,633,947 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 01 மாதம் முதல் 31 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் சரியாக வெளிப்படுத்தப்படாமை

திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட 08 வாகனங்களின் பெறுமதி ரூபா 39,300,000 தொகை செலவினத் தலைப்பு இலக்கம் 153 இன் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கொள்வனவுகளின் கீழும் குறிப்பிடப்பட்டிருந்தமை மற்றும் 11 வாகனங்களின் பெறுமதி ரூபா 63,783,500 ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்ட வாகனங்களின் பெறுமதி உண்மையாக இருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைந்த பொறுப்புக்கள் ரூபா 12,894,648 ஆகும்.

(ii) பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவுகள் எதுவும் நிதியாண்டிற்கான நிதிஏற்பாட்டுத் தொகையை விஞ்ச முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களில் சேமிப்பை விஞ்சி ரூபா 6,048,671 தொகையான பொறுப்புக்களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 2,279,848 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்கள் ஒதுக்கீட்டக் கணக்கில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இணங்காமைகள்

#### 3.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப்பிரமாணம் 177(1) | பாணந்துறை காணிப்பதிவாளர் அலுவலகத்தில் மீளாய்வாண்டின் 03 மாதங்களின் பெறுவனவுகள் தொடர்பான பரீட்சிப்பின் போது 08 சந்தர்ப்பங்களில் பெறுவனவுகள் ரூபா 374,150 தொகை வங்கியிலிடும் பொது 02 தினங்கள் முதல் 05 தினங்கள் வரையிலான கால தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 342 | கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலகத்தின் வருமான சேகரித்தல் கூறுகளில் பற்றுச்சீட்டு புத்தகங்களை கையளிக்கும் போது 53 சந்தர்ப்பங்களில் 265 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் திகதி குறிப்பிடப்படாமலும், திகதி ஒழுங்குமுறைக்கு புறம்பாகவும், கையொப்பமின்றியும் கையளிக்கப்பட்டமையினால் அடியிதழ் புத்தகங்கள் பாதுகாப்பாக கையாளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

### 3.8 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### 3.8.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் 03 பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் அந்த பணிகளின் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(i) பிறப்பு, இறப்பு, விவாக இலத்திரனியல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (e-BMD)

(ii) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் இரண்டாவது கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(iii) விவாகம் தொடர்பான தகவல்களை ஈ - சனத்தொகை தகவல் முறைமையில் உள்ளடக்குதல்.

(ஆ) திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாத 02 சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்ற ஈ - சனத் தொகை ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நாட்டில் ஏற்பட்டிருந்த பிறப்புக்கள் 1,741,330 இலிருந்து 1,356,829 எண்ணிக்கையும், இறப்புக்கள் 639,324 இலிருந்து 453,465 எண்ணிக்கையும் ஈ - சனத்தொகை ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் அதன் செயல்முன்னேற்றம் முறையே 22 சதவீதம் மற்றும் 29 சதவீதமாக இருந்தது. மேலும், 2014 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களின் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான தகவல்கள் எதுவும் தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 100,000 உரித்துறுதிகளை பதிவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 35,100 உரித்துறுதிகள் அதாவது 35 சதவீதம் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 3.9 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

பாணந்துறை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட காணி வரலாற்றுப் பத்திரங்களை விநியோகித்தலில் நிதி மோசடி தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை நடாத்துவதற்குரிய நட்டங்களைக் கணிப்பிட்டு அறவிடுவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமல் அதற்கு பொறுப்பானவராக இனங்காணப்பட்ட பெண் உத்தியோகத்தர் வேறொரு அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

### 3.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளிலிருந்து சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தால் சீரமைக்கப்படாதிருந்த பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2015 | 3.6.1 | ஒப்பீட்டு ரீதியான பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் கால அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 | 3.6.2 | மீளாய்வாண்டின் போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் |

உள்ளபடியான பதவியணிக்கு 04 உத்தியோகத்தர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 | 3.6.4 | ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டைப் போன்றே மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுக் கூட்டத்தின் போது கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 | 3.7(அ) | அரசாங்கத்தின் ஏனைய 04 நிறுவனங்களால் 2010 - 2014 காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பல வகைகளுக்குரிய நிலையான சொத்துக்களில் 60 அலகுகளை மதிப்பீடு செய்து சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கம்பஹா, பணாந்துறை மற்றும் தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகங்களின் நடவடிக்கைகளை பதிவாளர் நாயகத்தின் கைநூலுடன் மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சட்டத்தரணிகளால் எழுதி கையொப்பமிடப்பட்ட உரித்துறுதிகளின் இரண்டாவது பிரதி அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உரிய காணிப் பதிவாளருக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 50 சட்டத்தரணிகளால் உரித்துறுகளின் 313 இரண்டாம் பிரதிகள் கையளிக்கப்படாதிருந்தமையும் மேலும் 33 சட்டத்தரணிகளால் உரித்துறுதிகளின் 313 இரண்டாம் பிரதிகள் தாமதித்து கையளிக்கப்பட்டமையும், உரித்துறுதி எழுதி கையொப்பமிடப்படாமல் 103 சட்டத்தரணிகளால் வெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையும் தொடர்பாக அருகிச்செல்லும் அறிக்கை தயாரித்து உரிய படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உரித்துறுதியின் இரண்டாம் பிரதியை சட்டத்தரணி பரிசோதனைப் புத்தகத்திலும் உள்ளடக்குவதற்கு கம்பஹா மற்றும் பாணந்துறை அலுவலகங்களால் முறையே 08 மாதங்கள் மற்றும் 04 மாத காலங்கள் தாமதிக்கப்பட்டமையால் அருகிச்செல்லும் அறிக்கை விநியோகித்து ஒட்டுமொத்த, நிலுவை மற்றும் தண்டப் பணத்தை அறவிடலும் தாமதப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) கம்பஹா மற்றும் பாணந்துறை காணிப் பதிவாளர் அலுவலகங்களில் சட்டத்தரணிகளிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை மற்றும் தண்டப் பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 2,083,094 தொகை தொடர்பாக உரிய சட்டத்தரணிகளுக்கு அறிவித்து மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விண்ணப்பதாரர்களுக்கு தாமதமின்றி விநியோகிக்கப்பட வேண்டிய காணி வரலாற்றுப் பத்திரம் மற்றும் உரித்துறுதியின் பிரதி என்பவற்றை விநியோகித்தல் 161 சந்தர்ப்பங்களின் போது ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துறுதியைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உரித்துறுதி பதிவு செய்யப்பட்டதன் பின்னரான கொடுக்கல் வாங்கல்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 22,673,736 ஆக இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானம் உரித்து பதிவாளர் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட வங்கி வைப்புப் பத்திரம் மற்றும் வருமான அறிக்கையுடன் ஒப்பிடப்படாமையும், வங்கிக்குச் செலவு வைக்கப்பட்ட ரூபா 2,472,400 தொகை இனங்காணப்பட முடியாதிருந்தமையும், சேகரிக்கப்பட்ட வருமானத்தில் வங்கியினால் கழிக்கப்பட்டிருந்த ரூபா 253,770 தொகை எந்த முறையில் கழிக்கப்பட்டது என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாகவும் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.12 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 18 | 25 |
| (ii) | மூன்றாம் நிலை | 586 | 544 | 42 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,360 | 1,090 | 270 |
| (iv) | ஆரம்ப நிலை | 673 | 598 | 75 |
| | மொத்தம் | 2,662 | 2,250 | 412 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 412 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் தவறியிருந்ததுடன் அதில் சிரேஷ்ட மட்டத்தில் பதவிகளின் எண்ணிக்கையின் வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் 58 சதவீதமாகும்.

(ii) நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிக்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் 312 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமை திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளிக்கின்றமை சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.

(iii) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதிவாளர் நாயகத்தை நியமித்தல் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2017 சனவரி மாதத்தின் போது வெற்றிடமான பதிவாளர் நாயகம் பதவியின் கடமைகளை மேவுகை செய்தல் வரிசை அமைச்சரினால் அவ்வமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.